Chenkaantal
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

Volume - 1, Special Issue - 1, January 2022 E-ISSN: 2583-0481

# Occupation in Tamil Literature

**R. Murgan,** Ph.D Research Scholar of Tamil, M.T.T. Hindu College,
Manonmaniyam Sundaranar University, Tirunelveli, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-9172-5677**
**DOI: 10.5281/zenodo.6622396**

## Abstract

*If we start with the elegance of Tamil literature, then the Sangam period appears first. The people of Sangam times who lived amicable to nature do businesses for their living also. They realized that the agricultural industry was essential for the survival of human society. Because of that they mostly did agricultural work. They also did weaving, pottery and carpentry. During the pre-civilization period, people who lived in the cold areas wore tight-fitting clothing and people living in hot areas wore loose-fitting clothing. The purpose of the article is to bring forth the business adopted by the Sangam people.*

**Keywords:** Literature, Sangam Times, Agriculture, Occupation.

## References

[1] Tamilannal. *Tolkappiyam Porulathigaram*.
[2] Manikkavasagan Urai. *Silappathikaram*.
[3] Kazhaga Velieetu. *Purananuru Mulamum Uraium*.
[4] Kazhaga Velieetu. *Natrinai Mulamum Uraium*.
[5] Kazhaga Velieetu. *Pathupattu Mulamum Uraium.*

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# தமிழ் இலக்கியத்தின் தொழில்கள்

**இரா. முருகன்,** முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழியல் ஆய்வு மையம், ம. தி. தா.இந்துக்கல்லூரி, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0002-9172-5677**
**DOI: 10.5281/zenodo.6622396**

**ஆய்வுச்சுருக்கம்**

*தமிழ் இலக்கியங்கள் என்று தொடங்கினால் சங்க காலம் முதலில் தோன்றும் அதன் அடிப்படையில் பத்துப்பாட்டு எட்டுத்தொகை, பதினெண் மேல் கணக்கு, பதினென்கீழ்க்கணக்கு நூல்களில் வழியாக தொழில்கள் எவ்வாறெல்லாம் தொடங்கி அவைகள் எவ்வாறு மேம்பாடு அடைந்தது எந்த நிலத்தில் வாழ்ந்த மக்கள் என்ன? என்ன? தொழில்கள் செய்து வந்தனர் என்பதை திணை வாரி வாழ்ந்த மக்கள் செய்தனர். மனித சமுதாயம் வாழ வேளாண் தொழில் இன்றியமையாதது என்பதை உணர்ந்தனர். அதன் காரணமாக வேளாண தொழில் செய்தனர். அத்துடன் நின்று விடாமல் நெசவு தொழில், தச்சு தொழில் ஆகியவற்றையும் செய்து வந்தனர். நாகரிகம் வளராத காலத்தில் தழைகளையும், இலைகளையும் ஆடையாகவும், பின்னர் வேட்டையின் மூலம் கிடைத்த மான், புலி ஆகியவற்றின தோலையும் உடையாக உடுத்தினார் நாகரிகம் பெற்ற காலத்தில் பருத்தியில் இருந்து பஞ்சை பிரித்தெடுத்து நூலாக நூற்று ஆடை தயார் செய்து அணிய தொடங்கினார் உடை அணிதல் தட்ப வெப்ப நிலைக்கு ஏற்ப மாறுபட்டது. குளிரான பகுதியில் வாழ்ந்தவர் உடம்பை இறுக்கமாக கொண்ட ஆடையையும் வெப்பமான பகுதியில் வாழும் மக்கள் இறுக்கமில்லாத உடைகளையும் அணிந்தனர்.*

**திறவுச்சொற்கள்:** இலக்கியம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, விவசாயம், தொழில்.

**முன்னுரை**

தமிழ் இலக்கியங்கள் என்று தொடங்கினால் சங்க காலம் முதலில் தோன்றும் அதன் அடிப்படையில் பத்துப்பாட்டு எட்டுத்தொகை, பதினெண் மேல் கணக்கு, பதினென்கீழ்க்கணக்கு நூல்களில் வழியாக தொழில்கள் எவ்வாறெல்லாம் தொடங்கி அவைகள் எவ்வாறு மேம்பாடு அடைந்தது எந்த நிலத்தில் வாழ்ந்த மக்கள் என்ன? என்ன? தொழில்கள் செய்து வந்தனர் என்பதை திணை வாரி வாழ்ந்த மக்களின் தொழிலை இக்கட்டுரை வடிவமைக்கிறது.

**குறிஞ்சித் திணையில் வாழ்ந்த மக்கள் தொழில்கள்**

மனித சமுதாயம் வாழ வேளாண் தொழில் இன்றியமையாதது என்பதை உணர்ந்தனர். அதன் காரணமாக வேளாண தொழில் செய்தனர். அத்துடன் நின்று விடாமல் நெசவு தொழில், தச்சு தொழில் ஆகியவற்றையும் செய்து வந்தனர். நாகரிகம் வளராத காலத்தில் தழைகளையும், இலைகளையும் ஆடையாகவும், பின்னர் வேட்டையின் மூலம் கிடைத்த மான், புலி ஆகியவற்றின தோலையும் உடையாக உடுத்தினார் நாகரிகம் பெற்ற காலத்தில் பருத்தியில் இருந்து பஞ்சை பிரித்தெடுத்து நூலாக நூற்று ஆடை தயார் செய்து அணிய தொடங்கினார் உடை அணிதல் தட்ப வெப்ப நிலைக்கு ஏற்ப மாறுபட்டது. குளிரான பகுதியில் வாழ்ந்தவர் உடம்பை இறுக்கமாக கொண்ட ஆடையையும் வெப்பமான பகுதியில் வாழும் மக்கள் இறுக்கமில்லாத உடைகளையும் அணிந்தனர். ஆடை பற்றிய

குறிப்பு தொல்காப்பியத்தில் காணப்படுகிறது. இதிலிருந்து நெசவு தொழிலின் தொன்மையை அறிய முடிகிறது.

**"கூழை விரித்தல் காதொன்று களைதல் ஊழனி தைவரல்**
**உடைபெயரத் துடிக்ககலோம்**
**கொழீஇய நான்கே இரண்டென மொழிப" (தொல் நூ 427)**

சங்க இலக்கத்தில் பெண்கள் நெசவுத் தொழில் செய்பவராக காணப்படுகின்றனர். கைம் பெண்கள் வாழ்வாதற்திற்காக நெசவு செய்த செய்தி குறிஞ்சித்திணைப் பாடலில் காணப்படுகிறது. சங்க இலக்கியத்தில் நெசவு பெண்டீரை குறிக்க பருத்தி பெண்டிர், ஆளிற் பெண்டிர் போன்ற சொற்கள் இடம் பெற்றுள்ளனர்.

**"ஆளிற் பெண்டிர் தாளிர் செய்த**
**நுணங்கு நுண்பணுவல் போல" (நற்றினை 353 – 1-2)**
**"பருத்தி பெண்டின் பனுவல் அன்ன" (புறம் 125-1)**

மேலும், நாருடையையும் தழையுடையையும் அணிந்தனர் என்ற செய்தி குறிஞ்சித் திணைப்பாடல் வழி காணலாம்.

**இசை கருவி செய்தல்**

குறிஞ்சி நில மக்கள் தாங்கள் வேட்டையாடி கிடைத்த மிருகங்களின் தோல்களைக் கொண்டு இசை கருவிகளைத் தயார் செய்தும் மூங்கிற் பட்டைகளை பிளந்து தட்டை தண்ணுமை, ஆம்பற்குழல் போன்ற இசை கருவிகளையும் தயார் செய்தனர். இதனை தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. ஐந்திணைக்கு முரிய யாழ், பண், பறை என குறிப்பிடுகிறது.

**"தட்டைத் தண்ணுமைப் பின்னர் இயவர்**
**தீம் குழல் ஆம்பலின் இனிய இமிருரும்" (ஐங் 215 3-4)**

குறிஞ்சி திணைப்பாடல்களில் துடி, முடி, பறை, கொம்பு, குழல், வயர் போன்ற இடை கருவிகளின் பெயர்களாக குறிக்கப் பெற்றுள்ளது. இசை கருவிகளை தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி, மிடற்றுக்கருவி என வகைப்படுத்தியிருந்தனர்.

**இரும்புத் தொழில்**

வேட்டையாடிய மிருகங்களை சுட்டு திண்பதற்கு கற்கள் மூலம் தீ முட்டியவர்கள் உலைக்களம் அமைத்தார்கள் இதன் மூலம் இரும்பை காய்ச்சி அடித்து கருவிகள் செய்தனர். இதனைக் கொண்டு உழவுக்கு கலப்பை முதலியன தயார் செய்து உழவு தொழிலுக்கு பயன்படுத்தினர். உலக்களம் பற்றிய செய்திகள் குறிஞ்சித் திணைப்பாடல் வழிகாண முடிகிறது. மேலும் இரும்பை கொண்டு வில், அம்பு தயார் செய்து வேட்டைக்கு பயன்படுத்தினர் போர் செய்வதற்கும் அம்பை பயன்படுத்தினர் மேலும் அரிவாள் வேல் போன்ற கருவிகளையும் செய்து பயன்படுத்தின வந்தனர்.

**"காதலர்ப் பிரிந்த மாதர் கோதக**
**ஊதுயைக் குருகியினுயிர்த்தனரொடுங்கி" (சிலப் 4 : 58-59)**

உலைக்கு பெருமை சேர்க்கும் வகையில் தலைவனின் காமப்பெருமூச்சு கொல்லனது உலை மூக்கிற்கு ஒப்பு கூறப்பட்டுள்ளது.

**அணிகலத் தொழில்**

கடற்கரையில் கிடைத்த கிளிஞ்சல்கள், கடலில் கிடைத்த முத்து பவளம், சங்கு ஆகியவற்றை

அணிகலன்களாக அணிந்தனர். பின்னர் வெள்ளி, பொன் ஆகியவற்றை கொண்டு அணிகலன்கள் செய்து அணிந்தனர். இந்த செய்திகளை குறிஞ்சித்திணைப் பாடல்கள் வழியாக நாம் தெரிந்து கொள்ள முடிகிறது.

**ஒவியத் தொழில்**

சங்க கால மக்கள் இயற்கையோடு இணைந்து வாழ்ந்ததால் அவர்கள் அதிகமாக காண முடிந்த விலங்குகளையும், பறவைகளையும் மற்றைய உயிரினங்களையும் ஒவியங்களாக வரைந்தனர்.

**முல்லை நில மக்களின் தொழில்**

மக்களின் வாழ்க்கை தரம் உயர தொழில் முக்கியமாக அமைகிறது. இந்த நில மக்கள் காடும் காடு சார்ந்த நிலத்தில் வாழ்ந்தனர். இந்த நில ஆடவரை ஆயர் எனவும் வேட்டுவர் எனவும் குறிப்பிட்டனர். தொல்காப்பியமும் அவ்வாறே கூறுகிறது.

**ஆநிரை மேய்த்தல்**

முல்லை வாழ் மக்கள் ஆடு, மாடுகளை மேய்க்கும் தொழிலை பிரதானமாக செய்து வந்தனர். இவர்களை இடையர்கள் என அழைத்தனர். இந்த மேய்த்தல் தொழில் மூலமே பொருளீட்டினர்.

**“பறியுடைக் கையர் மறியினத்து ஒழிய**
**பாலொடு வந்த கூலொடு பெயரும்**
**ஆடிடை இடை மகன் சென்னிச்**
**சூடிய எல்லாம் சிறுபசு முகையே” (குறு 221 : 2-5)**

ஆயர் குலப் பெண்கள் பாலை மோராக்கி பக்கத்து ஊர்களில் கொண்டு விற்று அதன் மூலம் கிடைக்கும் காசில் வீட்டிற்கு வேண்டிய உணவு பொருள்களை வாங்கிவந்து சமைத்து உண்பர். தாங்கள் விற்ற மோர் காசை சேர்த்து வைத்து பசுக்கள் வாங்கி வளர்ப்பார்கள். மேலும், தரிசு நிலத்தை உழுது செம்மை செய்து வரகு விதைத்து பயன் பெற்றனர். பூவிற்றல் தொழிலும் செய்தனர் (நற் 97 : 6-7, நெடு 38) தட்சர்கள் மரத்தொழில் செய்தனர். கிணறு தோண்டும் தொழில் செய்தனர்.

**நெய்தல் நில மக்கள் தொழில்**

மீன் பிடித்தல், உப்பு விளைவித்தல், உலர்மீன் தயாரித்தல் உப்பு விற்றல் முத்தெடுத்தல் ஆகியவற்றோடு கொல்லர் தொழில் செய்தல், தச்சுத் தொழில் செய்தல், கால் நடை வளர்த்தல் குடிசை கட்டுதல் ஆகிய தொழில்களை செய்து வந்தனர். கொல்லர் தொழிலை “கொல்வினை” (குறுத்தொகை, பா. 304) இத்தொழில் மூலம் ஊளி தயார் செய்து சுறா மீனை பிடிக்க உபயோகப் படுத்துவார்கள். கரும்பு மற்றும் பிற தானியங்களையும் பயிரிட்டனர். வாணிகம் செய்தனர். மருத நிலத்தில் விளைந்த நெல்லை பிற நிலத்தைச் சார்ந்தவர்களுக்கு பண்டமாற்று முறை வாணிபம் செய்தனர். இங்கு வாழும் மக்களை கரையாளர் என்றனர். இவர்களை மீனவர், பரதர், முக்குவர் எனவும் பல பெயர்கள் விட்டு வளங்கி வந்தனர்.

**தொகுப்புரை**

நெசவு தொழில், இரும்பு தொழில், அணிகலங்கள் செய்தல், ஒவியத் தொழில், இசை கருவி செய்தல், உழவு தொழில் செய்தல் ஆடு, மாடு மேய்த்தல், மீன் பிடித்தல், தச்சு தொழில் செய்தல் கால் நடை வளர்த்தல், குடிசை கட்டும் தொழில் செய்தல், வேட்டை ஆடுதல், வேளாண்தொழில் முத்துகுளித்தல் ஆகிய தொழில்களை யார் யார் செய்தார்கள் என்பதை சங்க இலக்கிய தமிழ் நூல்களின் வழியாக தெரிந்து கொண்டதை இக்கட்டுரை மூலம் வெளிகொணரப்பட்டது. மலையும் மலை சார்ந்த

நிலத்தைக் குறிஞ்சி என்றும் காடும் காடு சார்ந்த நிலத்தைக் முல்லை என்றும் வயலும் வயல் சார்ந்த நிலத்தை நெய்தல் என்றும் வகை படுத்தி அங்கு வாழும் மக்கள் செய்யும் தொழில்களை வகைப்படுத்தி அதன் வழியாக பண்டமாற்று முறையை மேற்கொண்டு செம்மையாக தொழில் செய்து வளம் பெற்றனர் என்பதை இக்கட்டுரை நமக்கு உணர்த்துகிறது. தொல்காப்பியம், நற்றினை, சிலம்பு, புறநானூறு குறிஞ்சித்திணைப்பாடல், முல்லைத்திணைப்பாடல், நெய்தல் திணைப்பாடல், மருததிணைப்பாடல் மூலமாகவும் ஐங்குறுநூற்றில், பட்டினப்பாலையில் பெரும் பாணர்ற்று படையில் திரட்டடப்பட்ட செய்திகள் இக்கட்டுரையில் இடம் பெற்றுள்ளது. தமிழ் இலக்கியங்களில் வகைப்படுத்தப்பட்ட தொழில்களின் தொன்மையும் செழுமையும் இக்கட்டுரை வழி தெளிவு படுத்தப்பட்டுள்ளது.

**துணைநின்ற நூல்கள்**

[1] தமிழண்ணல். *தொல்காப்பியம் பொருளதிகாரம்.*
[2] மாணிக்கவாசகன் உரை. *சிலப்பதிகாரம்.*
[3]. கழக வெளியீடு. *புறநானூறு மூலமும் உரையும்*
[4] கழக வெளியீடு. *நற்றிணை மூலமும் உரையும்.*
[5] கழக வெளியீடு. *பத்துப்பாட்டு மூலமும் உரையும்.*

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.
**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.